"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.4229,71,35,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பிற்பகல் 1-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

3. அறிவிப்புகள்-தொடர்ச்சி

(ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2003 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும் மற்றும் ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

2. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)-தொடர்ச்சி

(உ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2003

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS